# தீந்தமிழ் வளர்த்த திருமறைக் காவலர்கள்







ஞானக்களஞ்சியம் II

கவிமணி
**க.த.ஞானப்பிரகாசம்**
நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானக்களஞ்சியம் - II

# தீந்தமிழ் வளர்த்த திருமறைக் காவலர்கள்

அரச பொற்கிழிப் புலவர் / கவிமாமணி
க.த. ஞானப்பிரகாசம்
நெடுந்தீவு.

வெளியீடு
கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்
10/2, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GNANAKALANCHIYAM - II

Title of the Book : THEENTHAMIL VALARTHTHA THIRUMARAIKKAVALARKAL

Author : KAVI MANI K. T. GNANAPRAGASAM

Address : 'RANI MANAI', ALVAI, SRI LANKA.

Edition : 2016

Copy right : The Author

Size : A5

Pages : vi + 30 = 36

Publisher : Harikanan (Pvt) Ltd.,
No. 681, K.K.S. Road, Jaffna.

Internationl Standard Book Number
978 - 955 - 43475 - 2 - 6

ஞானக்கள சியம் - II

நூல் : தீந்தமிழ் வளர்த்த திருமறைக் காவலர்கள்

ஆசிரியர் : கவிமணி க. த. ஞானப்பிரகாசம்

முகவரி : 'இராணி மனை', அல்வாய், இலங்கை.

பதிப்பு : 2016

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

அளவு : A5


பக்கம் : vi + 30 = 36

வெளியீடு : கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்

அச்சுப்பதிப்பு : கரிகணன் (தனியார்) நிறுவனம்
இல.681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

சர்வதேச நியம நூல் இலக்கம்
978 - 955 - 43475 - 2 - 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரச பொற்கிழிப் புலவர் / கவிமாமணி

**க.த. ஞானப்பிரகாசம்**

நெடுந்தீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொகுப்பாளர் உரை

சங்க காலம் முதல் தமிழை வளர்த்த பெரியாருள் மறைக்காவலர் முக்கிய இடம் பெறுகின்றனர். கவிஞர் குறிப்பிட்டவாறு,

குன்றம் வதித்து குணாகடலைத் தான் குடித்தே
அன்று தமிழ் தந்த அகத்தியனே ஆதிமுனி
பாவடிகள் தேன்வடியப் பாடுசிலம்பின் இளங்
கோவடிகள் ஓர் முனியே! கோவேந்தன் சீவகன்தன்
சிந்தாமணி தந்த திருத்தக்கர் ஓர் முனியே
செந்தமிழின் அகராதி செய்த முதற் தந்தை
தேம்பாவணி தந்தோன் செயல்வீர மாமுனியே,
ஒப்பிலக்கணம் ஒன்றைச் செப்பிவைத்த கால்ட்வெல்ட்
திப்பியபோப் பையரெல்லாஞ் சிறந்த மறைமுனிவர்...

எனும் கவிதை வரிகளில் இது நன்கு புலப்படுகின்றது.

அந்தவகையில் நாம் ஈழமணித் திருநாட்டிலும் தமிழை வளர்த்த எம் மறைக்காவலருள்

1. சுவாமி ஞானப்பிரகாசியார்
2. தவத்திரு தனிநாயக அடிகள்
3. தாவீது அடிகள்

என்போர் முக்கிய இடம் பெறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளர் உரை

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

செயலாளர்

[illegible]

10/2, [illegible]

[illegible]



சுவாமி ஞானப்பிரகாசியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீந்தமிழ் வளர்த்த திருமறைக் காவலர்கள்

## காப்பு

திரித்துவத்தின் நடுநின்ற தேவ தேவே
திருக்கமல பாதமலர் காப்ப தாமே

## தமிழ்த்தாய் வணக்கம்

கூழுக்குங் கவிதை பாடுங் குலத்தினிற் பிறந்தே னுக்கு
வாளுக்கு மேலாம் பேனா வலிமையைத் தந்தே எந்த
நாளுக்குங் காவ லாய் என் நாவினில் நடன்செய் யுந்தன்
தாளுக்கு வணக்கம் சங்கத் தமிழ்தந்த தெய்வத் தாயே.

## தலைவர் வணக்கம்

வானுயர்ந்த பொதிகைவரை பிறந்த தமிழ்க் குழந்தை
மாமதுரைத் தொட்டிலிலே வளர்ந்தவிளங் கன்னி
தேனுவந்த குமரிமுனை சேதுவெல்லாந் தாண்டித்
திருநாவற் குழிமாரன் நடராசன் தேடி
மேனிவந்த காதலொடு மலர்ப்பள்ளி கொண்டு
மேவுகவிக் குழந்தைகளின் தாய்தந்தை யாகக்
கோனுயர்ந்த கொழும்புநகர் கொலுவிருக்கக் கண்டோம்
கொழிக்கின்ற கவிமுகிலே நந்தலைவா வணக்கம்.

## சபையோர் வணக்கம்

தீந்தமிழ் வளர்த்த தெய்வத் திருமறைக் காவ லர்என்(று)
ஓர்ந்துநல் லடியைத் தந்த யேசுவின் உயர் பண் பாடு
தோய்ந்திடு தமிழ்ப்பே ரவைக்குந் தோழமைக் கவிஞ ருக்கும்
ஆய்ந்திடு சபையோ ருக்கும் அன்புசால் வணக்க மாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னுங் கிறீஸ்தரசர் மாவுலகின் காவலனார்
அன்னார் மரிக்குமுனம் ஆக்கினார் இராயப்பரை
பின்னர்த் திருமறையின் பெருந்தலைவர் மன்பாப்பு
சொன்ன மரபிற் தொடர்காவற் தெய்வங்களின்
வன்ன வரிசையதோ வாழைப் பரிசதுவே.

பொன்னைப் பொருள்போக மண்ணைப் புவி துறந்து
தன்னை மெழுகெனவே தானுருக்கிச் சிலமுனிவர்
தீந்தமிழைத் தான் வளர்த்து தெய்வத் திருமறைக்குச்
சாந்துணையும் ஒளிகொடுத்துத் தக்க பெருங் காவலராய்ப்
போந்த வரலாற்றைப் பொன்னேட்டிற் கண்டனம் யாம்.

பற்றற்ற எங்கள் பரம்பொருளின் பற்றதனால்
முற்றத் துறந்த முனிவர்களே யாயினுமென்?
கங்குகரை யில்லாக் காதற் தனிப்பற்றைச்
சங்கத் தமிழணங்கிற் சாந்துணையும் வைத்த தயரா
இன்பமதைத் துய்த்த இரகசியம் உலகறியும்
குன்றம் வதிந்து குணாகடலைத் தான்குடித்தே
அன்று தமிழ்தந்த அகத்தியனே ஆதிமுனி
பாவடிகள் தேன்வடியப் பாடுசிலம்பின் இளங்
கோவடிகள் ஓர் முனியே! கோவேந்தன் சீவகன்தன்
சிந்தா மணிதந்த திருத்தக்கர் ஓர் முனியே
செந்தமிழின் அகராதி செய்த முதற்தந்தை
தேம்பாவணிதந்தோன் செயல்வீர மாமுனியே
ஒப்பிலக் கணமொன்றைச் செப்பிவைத்த காட்ல்வெல்ட்
திப்பியபோப் பையரெல்லாஞ் சிறந்த மறைமுனிவர்
சாகிற் தமிழ்படித்தே சாதல் - வேண டெனும் விருப்பில்
மூழ்கித்தங் கல்லறையில் மூப்பற்ற " தமிழ்கற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனென் றேவரைந்து வைமின்" எனக் காதலொடு
மேநாட்டு மறைமுனிவர் விளம்பி வைத்த பொன்மொழிகள்
தேனாட்டுஞ் செந்தமிழ்க்கோர் தெய்வச் சிறப்பன்றோ.

இம்மரபின் மாலையிலே ஈழமணி மாதவளும்
மும்மகவை யீன்றெடுத்து முச்சுடராய்த் தோற்ற வைத்தாள்
ஆராய்ச்சிக் கப்பாலும் அப்பாலு மேசென்று
ஏரார் எழிற்காவில் ஏவாளே பேசிய 'தெம்
ஆதிமொழி தமிழெ' ன்றே அப்பீற்கும் இடமின்றி
ஓதி முரசறைந்த உயர் ஞானப் பிரகாசர்
உலகறிந்த பெருமுனிவர் உம்பரமு தென்னவரு
மணிபோன்ற யாழ்நூலை மதங்கசூ ளாமணியை
அணியாகத் தந்த விபு லானந்தர் ஒருமுனிவர்
தீந்தமிழின் வெண்புறவாய் றிசையெங்குந் சிறகடித்துப்
போந்ததனி நாயகமும் புனிதவொரு தவமுனிவர்.

இன்றுதமிழ்ப் பேரவையோர் எடுத்தமுத் தமிழ்விழவின்
குன்றாம் குரு ஞானப் பிரகாச குலமுனிவர்
மணியீழ மாதவமோ மானிப்பாய் பொன்னகர் செய்
அணி மதுரத் தனிப்பேறோ அச்சுநகர்த் தம்பிமுத்தின்
ஞானப் பழஞ் சொரியும் நற்குடும்பச் சோலை மலர்ந் (து)
ஆன கலையமுதத் தேன்மாந்தி அன்புருவாம்
மோனப் பரம்பொருட்காய் முற்றுந் துறந்தழகார்
வெண்போர்வை, உயர் தோற்றம், மெய்ஞ்ஞான மிடுக்குநடை.
மென்தாடி, பொன்மேனி மின்சார வேகமொடு
நல்லூரிற் குச்சமைத்து ஞானப் பொருள் வழங்கியப்
பல்லூரும் "சவுல்" என்றே பாராட்டக் கங்குல் பகல்
நெஞ்சணைத்த சிலுவையுடன் நீண்டவழி தாண்டியிளங்
குஞ்சணைக்குந் தாய்போற் குடிய ணைத்த கோமகனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரும்புருக்குந் தர்க்கமதால் எழுத்தாணிக் கூர் மழுங்கப்
பெரும் புவிக்கு விருந்தளித்த பேராய்வின் நூற்பெருக்கால்
அரும் பலியின் பீடங்களால் ஆன்றகலைக் கூடங்களாற்
திருச்சபைத்தாய் கொலுவிருக்கச் சிம்மா சனமமைத்தோன்
பாற்கடலின் ஆழம் பதம்பார்த்த மந்திரம் போல்
நூற்கடலின் ஆழம் நுணுகிக் கடைந்தெ டுத்து
விற்பனர்க்கு ஒப்பியலாம் விரிந்தவக ராதி தந்தே
அற்புதமாம் நந்தமிழே ஆதிமொழி யென்றறைந்து
சொற்புலவர் விருதேற்றுத் தூயதமிழ் மறைக்கும்
பொற்புவியின் காவலராய்ப் புனிதபணி சுமந்தார்.

அடிகள்தனி நாயகத்தை அம்ம நினைந்தாலே
அடிதொட்டு முடிவரையும் ஆனந்த வெள்ளமுறும்
'என்னைப்பின் செல்' லென்னும் இறைவன் திருவாக்கில்
தன்னையே அர்ப்பணித்துத் தவங்கிடந்த மறைவள்ளல்
தப்பாது முப்போதும் கைப்போது சென்னிவைத்தே
ஒப்பரிய ஞானப்பால் ஊட்டி உயிர்கொடுத் தோன்
மேவும் அருட்கோலம் தாவி யரவணைக்கும்
பூவாழ்நற் றாயன்பு பண்பில் புகலிடங்காண்
பத்துவிரல்களுமே பாவித்தபோ லெழுத்தின்
முத்துக்கள் எத்திக்கும் வித்தி யொளிகொடுத்தோன்
வத்திக்கான் திருச்சபைத்தாய் வாழ்வோங்கப் புத்தி சித்தம்
தித்திக்கச் செய்த திருமறையின் சேவைகளோ
பத்திக் கனல் வீசும் பசுங்கிளியும் கதை பேசும்.

"தன்னை யிறைவன் தமிழ்செய்ய" வே படைத்தான்
என்னுமுயர் மந்திரத்தை இதயம் புதையவைத்தோன்
வடவேங்கட மென்றும் வாழுங் குமரிமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடமே தெற் கென்னுமொரு எல்லையிட்டார் தமிழ்முன்னோர்
ஆனாற் தனிநாயகமாம் அடிக ளகில மெங்கும்
தேனார் தமிழ்முழக்கஞ் செய்து வலம்வந்தார்
ஒன்றே யுலகம் உயர்ந்த திருக்குறட்சீர்
துன்னு மொரு நெஞ்சுவிடுதூதாந் தமிழ் நூல்கள்
அன்றி உயர் ஆங்கிலத்தில் ஆக்குபல நூல்கள்
சென்ற திசையெட்டும் தேனின் சுவைகொட்டும்
தத்துவத்தில் அறிவியலில் சட்டத்தில் வார்த்தகத்தில்
மெத்த உயர்ந்தொளிரு மேல்கிழாம் நாடுமொழி
அத்தனையும் ஆராய்ந்தே பக்திக்குரிய மொழி
சுத்தத் தமிழென்றே சுருதிமொழி போலறைந்தோன்.

ஆராய்ச்சிக் கழகமேனும் அருங்குழந்தை அன்னையுமாய்ப்
பேரா தரவாகப் பேணிவளர் அப்பனுமாய்ச்
சீரார் திரித்துவத்தின் அருள்விளங்குஞ் சற்குருவாய்
ஆரா அமுதமெனும் ஆன்றதமிழ்த் தூதுவனாய்
நீரார் புவிமீது நின்றதனி நாயகம்மே
சந்திரனுஞ் சூரியனும் தண்டமிழும் உள்ளளவும்
எந்தச் சமூகமுமே ஒத்தெடுக்கும் நின்சீரை.

வானப் புகழ்பரந்த ஞானப்பிர காசர் தமை
மையமதாய்க் கொண்டிந்த நூற்றைந்தாம் மாநாட்டைத்
துய்ய முறையிற் தொடக்கிவைத்தார் பேரவை யோர்
சீரார் அருட்குரவர் சேர்கரவைச் செல்வமதும்
ஆரா அவைமுதல்வி அன்னைடே மியன்தூஉம்
ஓவாச் செயலாளர் உயர் தேவ ராசரதும்
மேவு பொருளாளர் 'பாலா' குழுவினதும்
நாவா லுரைக்க வொண்ணாப் பாரித்த சேவையிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தாற் தான்மறவாக் கற்பகம்போற் பொற்பணிகள்
ஞாலத்தி னும் பெரிதே நன்றியவர்க் கென்றும்
தீந்தமிழைத் தான் வளர்த்து திருமறையின் காவலராய்ப்
போந்த அனைவரதும் புகழ்நிலவு மங்காதே
சூழ்கடலே ஏழென்றார் சொன்ன எங்கள் காவலரோ
வாழ்புவியில் எட்டாங் கடலென்றே வாழ்த்தி அவர்
தாள் பணிந்தேன் மாசபைக்குந் தலை வணங்கி விடை
கொண்டேன்.

வணக்கம்

(கொழும்பு கிறிஸ்தவ தமிழ்ப் பண்பாட்டுப் பேரவையோர் - நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரது 105 ஆம் ஆண்டு நினைவு முத்தமிழ் விழாவில் நடாத்திய கவியரங்கப் போட்டி - 01.11.1980 இராமகிருஷ்ண மண்டபம் - வெள்ளவத்தை)

## சுவாமி ஞானப்பிரகாசியார் நினைவு நாள் சிறப்பு மலர் (30.08.1980) வெளியீட்டில்...
## தனிநாயக அடிகளுக்கு சமர்ப்பணம் செய்த கவிதை

திருத்துவத்தின் அருள் விளங்குந் திருச்சபைத்தாய் பரிமளிக்கக்
குருத்துவத்தின் வழிநின்று கூடலில் ஆய் தீந்தமிழ்த்தாய்
விரித்தபுகழ் பரப்பிடவே வெண்புறவாய்த் தூது சென்று
சரித்திரத்தை யலங்கரித்த தவத்திருவார் அடிகளெனுந்
தண்ணார் தனிநாயகத்தின் தாளிணைக்கே இம்மரை
விண்ணார் அமுதமெனச் சமர்ப்பித்தோம் வாழியவே.

ஞானி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானப்பிரகாச மாமணியே

(சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுநாளையொட்டி அனைத்திலங்கை ரீதியில் நடைபெற்ற கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்றது.)

மணியீழ மாதவமோ! மானிப்பாய் பொன்னகர் செய்
அணிமதுரத் தமிழ்ப்பேறோ! அச்சுநகர்த் தம்பிமுத்தின்
ஞானப்பழஞ் சொரியும் நற்குடும்ப சோலைவளர்ந் (து)
ஆனகலையமுதத் தேன்மாந்தி யன்புருவாம்
மோனப் பரம்பொருட்காய் முற்றுந் துறந்தமுனி
வெண்போர்வை; உயர்தோற்றம்; மெய்ஞ்ஞான மிடுக்கு நடை
மின்தாடி; பொன்மேனி; மின்சார வேகமொடு
நல்லூரிற் குச்சமைத்து ஞானப் பொருள்வழங்கிப்
பல்லூருஞ் 'சவுல்" என்றே பாராட்டடக் கங்குல்பகல்
நெஞ்சணைத்த சிலுவையுடன் நீண்டவழி தாண்டியிளங்
குஞ்சணைக்குந் தாய்போற் குடியணைத்த கோமகனார்;
இரும்புருக்குத் தர்க்கமதால், எழுத்தாணிக் கூர்மழுங்கப்
பெரும்புவிக்கு விருந்தளித்த பேராய்வின் நூற்பெருக்கால்,
அரும்பலியின் பீடங்களால், ஆன்றகலைக் கூடங்களாற்,
திருச்சபைத்தாய் கொலுவிருக்கச் சிம்மா சனமமைத்தோன்;
பற்பலவாம் மொழிப்பரவை படிந்துழன்ற பெற்றியதாற்
சொற்பிறப்பின் கருவெல்லாம் அணுவணுவாய்த் துளைத்தெடுத்து
விற்பனர்க்கு "ஒப்பியலாம்" விரித்தவக ராதிதந்து
அற்புதமாம் நந் "தமிழே ஆதிமொழி" யென்றறைந்த
"சொற்புலவர்" மதம்மொழியின் தொண்டரென ஓர் மனிதத்
தெய்வமது உண்டென்றாற் செந்தமிழர் யாவரும்மே
செய்தவத்தால் உருவான தேமதுரச் சற்குருவாம்
ஞானப் பிரகாச மாமணியே தாமறிமின்!
வானப் புகழ் பரந்து வாழ்க! அவர்நாமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனக்கமலம் மலர வாராய்

விருத்தம்

சரித்திரத்தின் தலைநகராம் யாழ்ப்பா ணத்தின்
தாமரைப்பொன் முகமென்னும் நல்லூர் தன்னிற்
தரித்தகுறு முனிவர்போல் வாழ்ந்து ஞானச்
சமுத்திரத்தின் அமுதெடுத்துச் சால ஈந்து
திரித்துவத்தின் அருள்விளக்குந் தீப மான
தேமதுர ஞானப்பிர காச ரென்னுங்
குருத்துவமா தவத்துநெடு முனிவர் தம்மின்
குலமலரே! மனக்கமலம் குளிர் வாராய்.

பெருவானில் எழுமேகந் திரண்டு கூடிப்
பெய்மழையாற் பொன் வயல்கள் வளம் பூரிக்கும்
வருஞானத் தமிழ்கூறும் நல்லுல கோர்
வடித்தளிக்குங் கலைவிருந்தால் உளம்பூ ரிக்கும்
குருஞானப் பிரகாசக் கோவின் பேராற்
குறித்துவரு நூற்றாண்டு மடலே ! நீதான்
திருவான ஞானப்பாற் கடலே யாகத்
திசையெட்டும் இசைபரப்ப வருக ! மாதோ.

(சுவாமி ஞானப்பிர காசரின் நூற்றாண்டு மலரிற்கு வாழ்த்துப்பா -1975)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருவே! நான் வணங்குகின்றேன்

அந்தத்தின் கீழும் அந்த ஆதியின் மேலும் நின்று
பந்தத்தை நீக்கி யாளும் பராபரன் கிறீஸ்து ராசா
இந்தபூ தலத்தி லந்த ஏழையி னுருவாய் வந்தும்
முந்துஞ் சீர்க் குருவாய் நின்றான் முதல் அவன் பாதம் போற்றி.

காவலர் பாவல லோர்கள் நன்குறை நல்லூர் ஞானக்
காவலர் நீயே யென்று கடல்குடி முனிவர் போலே
சேவைகள் செய்து வந்த தெய்வமே! பிரகா சம்மே!
பூவதம் போற்றும் ஞானப் புதிர் உனை வணங்கு கின்றேன்.,

புறமுறு மண்ணும் பொன்னும் போகமும் போலி யென்றே
திறமுறத் தேர்ந்து தெய்வத் திரித்துவப் பாதை நோக்கிப்
பிறவிநோய்க் கடலைத் தாண்டப் பெருந்தெப்ப மாகப் பூண்ட
துறவித் தெரிந்தஞானச் சுடருனை வணங்கு கின்றேன்.

ஈன்றநற் தாயார் தூங்கி எடுத்துத்தா லாட்டுஞ் சேயார்
சான்றவர் ஆக்கு தந்தை சார்ந்தான் மனைவி சுற்றம்
ஆன்றபே ரறிஞர் நண்பர் அரசர்வான் தீதர் மேலாய்த்
தோன்றிய குருவே! காலம் மூன்றுமே வணங்குகின்றேன்.

நோவிலும் பிறந்தாய்! வாட்டும் நோன்பிலும் வளர்ந்தாய்! கற்றோர்
நாவிலும் தவழ்ந்தாய்! ஞானம் நல்குறுந் தேம்பா வணியின்
பாவிலும் நடந்தாய்! விரிந்த பாயொடு நோயு மான
சாவிலும் அருகில் நின்றாய்! சற்குரு வணங்கு கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தின் அகலம் நீதான்! மலரினின் மென்மை நீதான்!
ஞானத்தின் முதிர்ச்சி நீதான்! ஞாலத்தின் பெறுமதி நீதான்!
கானத்தின் நாதம் நீதான்! கற்பனைக் கெட்டா வேத
மோனத்தின் வடிவும்நீதான்! முனிவரே! வணங்குகின்றேன்.

ஞானநல் இரத மேறி நாற்பெரும் திசைக ளோறும்
தேனமு தொத்த எழு திரவியம் அளித்த வள்ளல்;
வானவெண் ணிலவு போலே வான்புகழ் விரித்தான்; ஞானக்
கோனவர் தொண்டுவாழ்க! குருவே! நான் வணங்குகின்றேன்.

திருப்பலிப் பீட மோர்பால்! திகழ்கன்னி மாட மோர்பால்!
அருங்கலைக் கூட மோர்பால்! ஆக்குநூல் விசேடம் ஓர்பால்!
வருங்கடல் எழுங் கொள்ளா வான்பயிர் வளர்த்தாய் வற்றாப்
பெருங்கடல் எட்டு நீதான்! பேதையேன் வணங்கு கின்றேன்.

பற்பல மொழிகள் தோய்ந்து பகருசொற் பொருள்கள் ஆய்ந்து
அற்புதத் தமிழே ஆதி மொழியென அறுதி யிட்ட
விற்பன! அழைத்தே நின்னைக் கம்பனும் விருந்திட் டானோ?
"சொற்கலைப் புலவர்" ஏறே! சுவாமியே! வணங்கு கினறேன்.

கங்கையுன் கருணை கூட்டும்! கடலும்நுண் கலையை நாட்டும்
துங்கநற் றொண்டே யுள்ளக் கோயிலிற் தூபங்காட்டும்
திங்களுன் ஒளியைத் தீட்டும்! தெய்வமும் முடியைச் சூட்டும்
சங்கைகூர் குருவே! நின்னைச் சாந்துணை வணங்கு கின்றேன்.

(சுவாமி ஞானப்பிர காசரின் நூற்றாண்டு மலரிலிருந்து -1975)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் நாற்பது

01. ஏகபரம் பொருளுணர்ந்த வினியபக்தி ஒன்று;
இருவகையாம் பற்றறுத்த இதயசுத்தி ரண்டு;
வேகமொடு மூவாசை வென்றசக்தி மூன்று;
விளங்கும் நாற் பண்புகளின் விளைநிலனே நான்கு;
தேகமுதல் ஐம்புலனும் ஒறுத்ததிறன் ஐந்து;
திரண்டஅறு பகைவரையும் செறுத்தமனம் ஆறு;
தாகமொடு ஏழ்நிதியம் தந்தபயன் ஏழு;
தரணியெட்டுத் திசையும்முட்டத் தாவுமிசை யெட்டு;

02. மானிப்பாய் அச்சுநகர் மதுரகனிச் சாறு;
வளம்பொலிந்த ஈழமணி மாதவத்தின் பேறு;
ஊனுயர்நல் உணர்ச்சியெலாம் ஒண்டமிழின் ஆறு;
ஊணுறக்கம் தவித்துழைத்த ஒருபுலவ ரேறு;
வானிமிர்ந்த கோயில்பள்ளி வகுத்த மின்னின் வேகம்
மதப்பயிர்கள் வளர்க்க நிதம் மழைசொரிந்த மேகம்
நானிலத்திற் திருச்சபைத்தாய் கொலுவிருக்க நாளும்
ஞானரதப் பவனிவந்தோன் நவிலுபதி னைந்தே.

03. திரித்துவத்தின் அருள்விளக்குந் திகழ்வான சோதி;
செம்மையறங் காத்ததிலே சேர்மனுவின் நீதி;
தரித்திரர்க்கு நிழலளித்த கற்பகநற் தாரு;
சவுல்சாங்கோ பாங்கரெனச் சாற்றிடுவார் பாரு;
சிரித்தமுகங் காட்டிவரும் சிங்கார ரூபம்!
தெய்வீக ஒளிவிரித்த திருஞான தீபம்!
குருத்துவத்தின் மணிச்சிரகம்; கொள்கைக்கோர் கோயில்
கொற்றவைக்கோர் நற்றலைமை கூட்டுகழு வெட்டே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. சொற்பொருளின் கருவெல்லாந் துளைத்தெடுத்த வைரம்,
சோர்வறியா ஆராய்ச்சிக் கடல்உலவு வங்கம்
அற்புதமாங் கலைக்கடலில் அமுதெடுத்த மலையம்
அருள்நிதியம் பலசுமந்த ஆன்மசுக நிலையம்;
விற்பனராம் போப்பையர் வீரமுனி கால்ட்டுவல்
மெய்யடியார் மரபில்வரு விரிந்தபுகழ் நிலவு,
"ஒப்பியலாம்" அகராதி உலகரங்கில் ஈந்த
உன்னதமார் பொற்சுரங்கம் சொன்னவைமுப் பானே.

05. கோவேந்தர் நாவலர்பா வலர்குலவு நல்லூர்
குச்சமைத்தோன் குடியணைத்தோன் கொடிபறக்க விட்டோன்
பாவேந்தர் நாவில்நட னாடுபசுந் தென்றல்
பாரிலெங்கள் தமிழ்மொழியே ஆதியென நாட்டி
நாவேந்தி முரசறைந்தே மணிமௌலி சூட்டி
நாடறிந்த "சொற்புலவர்" விருதேற்ற ஞானி
பூவேந்தி வரவேற்கும் புனிதஒரு தெய்வம்
போற்றிடுவோம் ஏற்றிடுவோம் முப்பானேழ் என்றே.

06. வத்திக்கான் திருச்சபைக்கோர் வைரமணித் தூணே!
மதம்மொழியின் தொண்டினுக்காய் வாழ்ந்தஅற வோனே!
முத்திக்கு வழிநடத்தும் தத்துவம் தேர் மூர்த்தி
முயன்றிங்கு நாற்பதென மொழிந்தனம் மா சீர்த்தி
எத்திக்கும் அடங்காதே நூற்றைந்தாம் ஆண்டில்
இறவாத புகழெல்லாம் எடுத்திங்கே பாடும்
சக்திக்கும் இடமில்லை: மிச்சத்தை உம்பர்
சந்தித்த கம்பரவர் சாதிப்பார் நன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தவத்திரு தனிநாயகம் அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறை விளங்கும் தீபங்கள்

மின்னும் இளமையும், மேதகு செல்வமும், துன்னும் யாக்கையும், பொன்னும், பொருளும், போகமும் எல்லாம் நீரில் குமிழியென நீத்து அழிந்து போகும் அவச் செல்வங்களில் அகந்தோயாது அழியாத தவச் செல்வமாகிய துறவினைத் தேர்ந்தெடுத்த மெய்யடியார்கள் பலர் நம் நெடுந்தீவில் உதயஞ் செய்திருக்கின்றனர். அவர்களுட் தலைசிறந்த தவத்திரு அடிகளாய் விளங்குபவர் உலகம் போற்றும் உத்தமன் சேவியர் எஸ். தனிநாயகம் அடிகளார். அன்னாரை ஈன்று புறந்தந்த உதரம் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த தெனினும் சான்றோனாக்கிய தந்தையார் ஸ்ரனிஸ்லொஸ் அவர்கள் நெடுந்தீவைச் சேர்ந்தவர். மருணீக்குங் கல்வியை மாண்புடன் போதிக்கும் மகத்தான ஆசிரியர் பணியை மேற்கொண்டிருந்தார். தமது ஒரு மைந்தன் நற்பரனின் அருணோக்கி வாழும் பாங்கினையறிந்து உளம் பூரித்தவர்.

யாழ்ப்பாணம் புனித சம்பத்திரிசியார் கல்லூரியிற் படித்த இவர் பேச்சுப் போட்டியிற் தங்கப்பதக்கம் பெற்றார். ரோமாபுரி சென்று வேதசாஸ்திர விற்பனர் ஆயினார். கலாநிதிப் பட்டமும் பெற்றார். 1938ஆம் ஆண்டு பங்குத் திங்கள் 19 ஆம் நாள் குருவுடை தாங்கினார். ரோமைச் சர்வகலாசாலையில் பேராசிரியர் பதவியும் வகித்தார். அமெரிக்கா சென்றிருந்தபோது பொஸ்டன் நகர அதிமேற்ராணியாரால் நல்லெண்ணத் தூதுவராகவும் தென்னமெரிக்கக் குடியரசினால் அரச விருந்தினராகவும் கடமையாற்றினார்.

1947 இல் கத்தோலிக்க பரிபாலனத்தின் கீழ் தமிழ்க் கலாசாரம், இலக்கியம் ஆகியவற்றைப் பரப்பும் நோக்குடன் தமிழ் இலக்கியச் சங்கத்தை ஆரம்பித்தார். 1948இல் அமெரிக்காவுக்குச் சென்று ஐக்கிய அமெரிக்காவின் 48 மாகாணங்களிலும் சொற்பெருக்காற்றினார். அன்னாரது செபமும் தபமும், திரிகரண சுத்தியும் செய்வன திருந்தச் செய்யும் ஆற்றலும் அவரை உலகம் புகழும் உத்தமராக்கியது. 1966 இல் மலேசியாவின் தலைநகரான கோலாலம்பூரில் அடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்டாற்றியபோது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டை முதன்முதலாக ஆரம்பித்தார். இரண்டாவது மகாநாட்டிலும் முக்கிய பங்கை எடுத்துக் கொண்டார். உலகநாடுகளிற் தமிழ் முழங்கச்செய்து அருந்தமிழன்னையை அரியாசனத்தில் ஏற்றிய பெருந்தகையாளராவார்.

தவத்திரு தனிநாயகம் அடிகள் 'தமிழ்ப் பண்பாடு' எனும் ஆங்கில ஏட்டின் ஆசிரியராவார். பன்மொழிப் பண்டிதராகிய இவர் அன்பின் இருப்பிடம். அறிவின் நிறைகுடம், ஆத்மீக தாகம் மிக்கவர். இந்நாளில் ஓய்வு பெற்றிருந்தாலும் திருமறைக்கும் செந்தமிழுக்கும் ஆற்றும் தொண்டுகளுக்கு அணிந்துரை சாற்ற அருகதையிலோம். வாழ்க! தனிநாய அடிகள்.

யாழ்/ நெடுந்தீவு நடுக்குறிச்சி றோ.க. ஆண்கள் வித்தியாலயத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவுவிழா மலரிலிருந்து - (1971)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லுலக நாயகம்
## தவத்திரு தனிநாயகம் அடிகள்

அன்புமலர் தூவிவிழா ஆனந்தமாய் எடுப்போம்!
அடிகள்தனி நாயகத்தின் ஆன்றபுகழ் படிப்போம்!
பொன்மடியில் வளர்த்தெடுத்தாள் புவிமாதுக் கணியாய்ப்
போற்றுநெடுந் தீவகமாம் புனிதத்தாய் மணியாள்.

கனிமதுரத் 'தேம்பாவணி'க் காவியமோர் துறவி
கற்றுவல்லார் போற்றும் 'ஒப்பு - லக்கண'மோர் துறவி
இனிய "தமிழ் ஆதிமொழி" என்றவனோர் துறவி
'இறைவன் பக்தி மொழி'யென்றே ஏற்றினனுந் துறவி.

ஆக்கியக ராதிதர அரும்பாடு பட்டார்
அரியவுரை ஆய்வுகட்கும் அன்னநடை யிட்டார்
தேக்கிவரு பன்மொழியாந் திரைகடலைத் தேடித்
திரவியங்கள் சேர்த்தளித்த துறவிகளோ கோடி.

இம்மரபின் மாலையிலே இலங்குமொரு மணியே!
எங்கள்தனி நாயகமாந் தங்கக்குரு முனியே!
செம்மையறங் கிடந்தொளிருந் தெய்வீக நெஞ்சம்
திருமகளுந் தேடிவந்து சேரும்முக கஞ்சம்.

மண்ணுடனே விண்ணையுமே வளைத்துழுது விட்டான்;
மதம்மொழியின் புதுவிதையாம் மணிகள்பல நட்டான்
எண்ணுடனே ஏட்டடங்கா இசைமழையைப் பெய்தான்
ஈழமணித் தாயவளும் என்னதவஞ் செய்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன் மண் போகமெல்லாம் மின்சிமிட்டாய்க்
கண்டான்
புனிதமனத் துறவதனைப் பூண்டுநிலை கொண்டான்;
முன்னும் பின்னும் உள்ளத்தில் இறைவனையே பற்றி
முத்திநெறி காட்டுவதில் முனைந்து கண்டான் வெற்றி.

வத்திக்கான் திருச்சபைக்கோர் வயிரமணித் தூணே!
மறைவாக்கைத் திருவாக்கில் வடித்துரைக்குந் தேனே!
தித்திக்கும் எஞ்ஞான்றுந் திரித்துவத்தின் ஞானம்!
சிந்தனையை யருட்டிவிடுந் தெய்வீக கானம்.

சங்கந்தரு தீந்தமிழின் சாகரத்தில் தோய்ந்தான்;
தாவியெடு முத்துக்களைத் தனித்தனியே யாய்ந்தான்;
தங்கமணி மாலையெனச் சரஞ்சரமாய்க் கோத்தான்
தமிழ்த்தாய்க்கு முடிசூட்டித் தனிமகிழ்வு பூத்தான்.

'இருந்தேனே யிவ்வுலகிற் தமிழினுக்காய்' என்றான்;
எண்ணியெண்ணிக் கொட்டிவிட்டான் ஏதேதோ வெல்லாம்;
அருந்தினவர் விண்ணவர்தம் விருந்தமிழ்தம் என்றார்;
அனைத்துலகும் வரவேற்கும் அறிஞனென நின்றார்.

உலகதமிழ் ஆராய்ச்சிக் கழகமென எங்கும்
ஒப்பில்லா மகவினுக்கோர் உயர்தந்தை யானான்;
இலகுதமிழ்த் தூதுவனாய் ஏழுலகுங் கண்டான்;
இவனெட்டாங் கடலென்றால் எவர்மறுப்பா ரீங்கே.

தங்கமணித் தூவியெங்கே! தசவிரலுஞ் சேர்ந்து
தமிழுழுத பூங்கரங்கள் தாள்களுந்தான் எங்கே!
சங்கத்தமிழ்த் தேன்வடிந்து தவழுமிதழ் எங்கே!
தலையசைக்கும் பண்பெங்கே! தவவடிவு மெங்கே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவத்துக்கு நாயகம் நீ! சான்றவர்கள் கூடுஞ்
சற்சபைக்கு நாயகம் நீ! தமிழுக்கும் நீயே!
எவற்றுக்கும் நிகர்நீயே! என்றுமனம் ஆற
இன்றும்பர் நாயகமாம் இடத்தினுக்கோ அழைத்தார்.

"நன்றிப்பா லுய்ப்பதுதான் அறி" வென்னும் நல்ல
ஞானத்தைத் தந்துபர மானந்தத் தேனை
என்றும்நீ துய்ப்பதற்காய்ச் சென்றிட்ட போதும்
எழின்மதுரை நெடுந்தீவுச் சிலைகள்கதை கூறும்.

"எடுத்தாள நாடிலையே என்றாலுந் தமிழர்
எழுத்தாலே யுலகாள்வர்" என்றகுறிக் கோளைத்
தடுத்தாள ஒருவரின்றிச் சாதனைகள் தந்த
தவத்திருவாம் அடிகள்தனி நாயகமே வாழ்க!

(யாழ்/ மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் 18.07.1981 அல் தவத்திரு தனிநாயக அடிகள் குறித்து வெளியிட்ட "மாட்சி நயப்பு மலரில்" இருந்து...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு தனிநாயகம் அடிகள் கவியரங்கு - (1981) யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் தலைமைதாங்கியபோது...

## தலைவர் உரை
### கொச்சகம் (மடக்கு)

திரித்துவத்தின் நடுநின்ற தேவனுக்கும் ஆதிமொழிச்
செந்தமிழாம் அன்னையர்க்கும் சீமோனின் வழிவந்த
அருட்பொலிந்த தீயோகுப் பிள்ளையெனும் ஆயருக்கும்
அருமுதல்வர் குருநிதியாம் ஆனமைக்கல் சுவாமியர்க்கும்
திருவமைந்த குருமணிகள் கன்னியர்கள் அதிபதியாஞ்
சிவநாதன் கவிவாணர் தலைவர்செய லாளருக்கும்
பெருமைதரு திருமறைசேர் ஆசார்க்கும் வந்திருக்கும்
பேரவையோர் யாவருக்கும் பெரிதுவந்த என்வணக்கம்.

### கொச்சகம் (தனி)

அடிகள்தனி நாயகத்தை அம்ம! நினைக்கையிலே
அடிதொட்டு முடிவரையும் ஆனந்த வெள்ளமுறும்
மடிகொடுத்த தமிழ்த்தாயின் மறைத்தாயின் மனங்குளிரும்
அடிபணிந்தேன் நல்லுலக நாயகமே! அஞ்சலித்தேன்.

உன்புகழைப் பாடுதற்கே ஓராறு புலவர் வந்தார்!
என்கவிதை பாடுதற்கோ இதுநேரம் அல்ல இவர்
அன்பொழுகும் கவிதைகளில் அடிகள்புகழ் நடனமிடும்
என்புருகக் கேட்டுமகிழ்ந் திசையமுதம் உண்டிடுவீர்.

வந்த புலவர்களில் நால்வர் அடிகளது
சொந்தமெனத் தக்கவர்கள்; மற்றோர் அருஞ்சிடர்
சந்தக் கவிதைமலர் சரஞ்சரமாய்க் கோத்திடுவார்
அந்தநறு மாலைதனை அடிகளுக்குச் சூட்டிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிஞர்கள்

## 1. (பண்டிதர் க.யோ.ஆசிநாதன் அவர்கள்)

*வரவு*

மாமதுரைப் பண்டிதரும் வான்பிறைபோல் "வளர்தமிழ்நூல்"
சேமமுறத் தந்தவரும் சேர்முன்னாள் அதிபரரும்
நாம் மதிக்கும் நல்லாசி நாதனுமாம் இவர்கவிதை
தேமதுர மாயினிக்கும் செவிமடுத்துக் கேட்டிடுவோம்.

*நன்றி*

அப்பட்ட மாயெடுத்தே அடிகள் புகழையெல்லாஞ்
செப்பிட்ட பண்டிதரின் திறனோ அரிதரிது
ஒப்பிட் டுரைக்கவொரு உவமை கிடையாதே
உப்பிட்ட தீஞ்சுவையின் உருசியை யறிந்தனமே.

## 2. வித்துவான் ச. அடைக்கல முத்து அவர்கள்

*வரவு* **விருத்தம்**

வில்லின் செல்வன் விஜயனவன்; விருந்தின் செல்வன்
விதுரன்போற்
சொல்லின் செல்வன்; கவியமுதச் சுவைக்கும் பாடஞ்
சொலிக்கொடுப்போன்
கல்லிற் கனியைத் தரவல்லான்; கவிபா ரதியும் இணையில்லான்
முல்லை றோசா மணங்கமழும் முத்தின் கவிதை
இனிக்கேட்போம்

*நன்றி*

சொல்லும் பொருளும் நடன் ஆடச் சுவையும் அணியுங்
கலந்தாடப்
புல்லும் வளமார் கற்பனையில் புலமைத் தென்றல்
அசைந்தாட
அல்லும் பகலும் உளக்கோயில் அடிகள் அமர்ந்து குடியிருக்க
நல்ல கவிதை மழைசொரிந்தான் நாடே யறிந்த
'அமுதெ'ன்பான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. அமிர்தகவிப் புலவர் ம.விக்ரர் (ஜெயம்) அவர்கள்

வரவு **விருத்தம் வேறு**

பாங்கமை கவிதைப் போட்டி பலவினிற் பரிசு பெற்றோன்
தீங்கரும் பான பாடல் திரட்டியே "இதய வீணை"
ஓங்கிடும் நூலைத் தந்தோன்! உம்பரின் அமிர்த நாமம்
தாங்கிய புலவர் விக்டர் தருகுவார் பருகிப் பார்மின்!

நன்றி

மாதிரம் அனைத்தும் அந்த மணிப்புறாப் போற்பறந்து
தூதுரை அடிகள் தம்மின் தூயநற் தொண்டை யெல்லாம்
ஆதர வோடு தந்தான்! அழகிய கவியிற் கோத்துச்
சீதமா மதியம் போல "யாழ் ஜெயம்" சிறந்து வாழ்க.

## 4. கவிஞர் அ. பர்னாந்து அவர்கள்

வரவு

பயிலுறு காலை நல்ல பண்பும்பா ராட்டு முற்றோன்
இயலிசை நாடக த்தில் ஈடுபா டென்றும் பெற்றோன்
செயிரறு கவிகள் பாடுஞ் சீருறு பர்னாந் தாசான்
தயவுடன் வருக! வென்றேன் தரத்தினை யுரைத்துப் பார்மின்!

நன்றி

பூங்கரத் தாசி யீந்து புவியுளோர் மயல்கள் தீர்த்த
ஓங்குநம் தனிநா யகத்தின் உலப்பிலா ஆற்றல் எல்லாம்
நீங்கரும் இசையாற் பாடி நேர்மையா யெமக்குத் தந்த
பாங்குறுங் கவிஞ னான பர்னாந்து வாழ்க நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. கவிஞர் முகில்வாணன் அவர்கள்

*வரவு*

பூவண்ணத் தழகை யெல்லாம் புரந்தெமைக் காப்போன்
தந்தான்
பாவண்ணத் தழகை யெல்லாம் பாவலர் பலருந் தந்தார்
மாவண்ண மீன்கள் பாடும் மாமட்டு முகில்வாணனார்
நாவண்ணம் வாய்ந்தோன் பாடும் நற்கவி யினிநாம்
கேட்போம்.

*நன்றி*

மெய்ப்பொருள் உணர்ந்த சிந்தை மேதினி போற்றுந் தந்தை
பொய்ப்புலன் வென்ற ஞானப் புண்ணியன் அடிகளாரின்
கற்பனைக் கெட்டாச் சேவைக் கடலினுட் தோய்ந்து
தோய்ந்து
அற்புதக் கவிபடைத்தான் முகில்வாண அறிஞ னாமே

## 6. புலவர் A.W. அரியநாயகம் அவர்கள்

*வரவு*

ஆயஆன் நிரைகள் சூழ்ந்த அணிநெடுந் தீவிற் தோன்றிப்
பாயிருள் சீக்கும் ஞானப் பல்கலை அண்ணா மலையிற்
தாயெனும் அடிகள் நின்ற தண்ணிழல் இவனும் நின்றான்
நாயகம் அரியம்! புலவன்! நாவலோன்! கவிதை கேட்போம்!

*நன்றி*

**வெண்பா**

அடக்கம் பொருணுட்பம் ஆங்கோசை யின்பம்
தடக்கல் எதுவுமிலாத் தன்மை - உடன்விரவு
ஆயபுகழ்த் "தாகூர்" அரும்படைப்பாய் நம்அரிய
நாயகமே தந்தான் நயந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிப்பு கொச்சகம்

அடிகள்தனி நாயகத்தின் அளப்பரிய சேவைகட்கு
முடிசூட்டிப் பரிமளிக்க முத்தான கவிதைகளைப்
படிமுறையாய்த் தந்தளித்த பாவலர்க்கெப் பரிசளிப்போம்?
நடைமுறைகள் தேர்ந்துணர்ந்த நற்சபையீர்! நும்விருப்பம்!

"யாப்பிலாக் கவிதை யேனும் யார்செய்த கவிதை யேனும்
மாப்பிலாப் போல எண்ணி மடியினில் வாங்கி வைக்கும்
மூப்பிலாத் தமிழின் தாயே" மூவிரு கவிஞர் கட்கும்
காப்புநீ! அடிகளாரின் கருணையுங் காக்க நீடே.

அந்நாளில் மூவேந்தாய் அரசோச்சி வந்திட்ட
நன்நாமச் சேரரொடு நவில்சோழ பாண்டியர்கள்
பொன்னோடு வளநாடு போதவளித் தவைவைத்தார்
இந்நாளில் நாடற்றோம் ஏதுசெய்வோம் பாவலரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்சால் புணர்த்தத் தூது சென்றார்

அடிகள்தனி நாயகத்தை அம்ம நினைந்தாலோ
அடிதொட்டு முடிவரையும் ஆனந்த வெள்ளமுறும்
மடிகொடுத்த தமிழ்த்தூதும் மறைந்தாலும் மனங்குளிரக்
கொடிபிடித்தே யரியணையிற் கொலுவிருக்கக் குரல் கொடுத்தோன்.

ஊர்காக்க ஏர்பெருக்கும் உழவெனில் மனம் பொன்னாகும்
பார்க்க உளந்திருத்தும் பண்பாட்டிற் தெய்வமும்மே
நேர்க்காக்க மனக்கோயில் நின்றருளும் வள்ளுவனும்
'பாருலகம் பண்புடையார்ப் பட்டதுவே' யென்றுரைத்தார்.

செந்தமிழும் ஆங்கிலமும் திக்கனைத்தும் பாராட்ட
வந்தமொழிக் கடல்பலவும் வாரிக் கரைகண்டு
சொந்தநலச் சுகபோக பந்தமெல்லாம் தான்துறந்தே
அந்தமிலாப் பரம்பொருட்கே யவையாவும் அர்ப்பணித்துத்

திரித்துவத்தின் அருள்விளக்கும் திருத்தொண்டில் மனந்திளைத்துக்
குருத்துவத்தின் போர்வையொடு குற்றால அருவியெனும்
அருட்கருணைப் பார்வையொடு அகம் வாக்கின் தூய்மையொடு
சிரித்தமுக நிருத்தமொடு செந்தமிழில் சால்பு கண்டார்.

தமிழினத்தின் கொள்கைகளோ, தகைசான்ற வாழ்முறையோ
சமயநெறித் தத்துவமோ சமன்கோல்போல் அரசியலோ
அமிழ்தினிய இலக்கியமோ அகத்திணையோ புறத்திணையோ
உமிழும் ஈ ராயிரத்தைஞ் நூற்றின்மேல் உதித்தனவே.

ஒல்காத்தொல் காப்பியத்தின் உயிர்நாடி என்ற புகழ்
மல்குபொரு ளதிகாரம் மருவுதமிழ்ச் சங்கம் வரு
நல்லெட்டுத் தொகைபத்துப் பாட்டுடனே கீழ்க்கணக்குச்
சொல்பஞ்ச காப்பியத்தும் சுரக்குமெம் சால்பனைத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலொடு வீரம் கரைபுரளும் அகம்புறத்தில்
ஓதும் அறம்பொருளின் ஊற்றெடுக்கும் நாலிரண்டில்
தீதில்பக்தி வீட்டின்பத் தேன்பாயும் தேவாரம்
ஓதில்நூல் நாற்பலனும் உண்டாமே எம்சால்பில்.

யாதும் நம் மூரே யாவரும்மே கேளிர் என்ற
நீதிவரும் தாரகமே செகம் போற்றுந்தனிச் சால்பு
திரிகரண தூய்மையொடு தெய்வீக வழிபாடு
வருவிருந் தோம்பலுயிர் மானமன்பு கண்ணோட்டம்.

வீட்டுக்கே வாழவிரும்பாது பிறந்திடு பொன்
நாட்டுக்கே வாழ்ந்து நலன் காணும் பொதுநோக்கம்
நான்பெற்ற இன்பமெல்லாம் நானிலத்து மாந்தர்களும்
தான் பெற்று வாழவெண்ணும் தேன்பெற்ற கோட்பாடு.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் முதலான
தெள்ளியநற் சால்பெல்லாம் செந்தமிழர் செல்வங்களே.
உம்பருமே தானுவக்கும் உவட்டாத தென்னமுதாங்
கம்பருயர் காவியத்தும் கரைகாணாச் சாகரம்போல
பொங்கிவரும் எம் சால்பின் புதையல் பலகண்டோம்.

தேரிழந்து சீரிழந்து திரண்டோள் வரைமார்பன்
தாரிழந்து தலைகுனிந்து தரைநெருடித் தனிநின்ற
வீர மன்னன் தசமுகனின் வெறுங்கை நிலை தான் தெரிந்தும்
"இன்றுபோய்ப் போர்க்கு நாளைவா" என்றுரைத்து

நின்ற புயல்வண்ணன் நிலைசால்பின் உரைகல்லாம்
கற்புடைய மங்கையரைக் கடவுளெனச் சொல்லுவது
அற்பமெனும் மாசிழைக்கும் அரசையறங் கொல்லுவது
இப்பிறப்பிற் செய்தவினை ஏழ்பிறப்பும் செல்லுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்பலவாம் சால்புகளைப் பால்வடியும் சிலம்புணர்த்தும்
பாதையிருள் நீக்கும் பருதி யொளிக்கதிர் போல்
கீதை யுபதேசம் கிளர் சால்பின் உயிர்வாசம்
கண்ணனுயர் ஈகையதும் காண்டீபன் வாகையதும்

பன்னுமனு நீதியதும் பாஞ்சாலி கற்பதுவும்
பின்னவரும் கும்பகர்ணன் பெருநன்றிக் கடப்பாடும்
இன்னபல சால்பெல்லாம் ஏற்ற இலக்கியங்கள் இழையோடும்
வன்னமணிப் பொன்நிதியம் மங்கா முழுமதியம்.

ஆரியர்கள் திராவிடத்தை அண்மியப் போதினிலும்
ஐரோப் பியர் சமணர் ஆதிக்க காலத்திலும்
அழியாமல் நின்றதூஉம் அன்றி யவர் தாமே
ஒழியாது கைக்கொள்ள உதவியதும் எம்சால்பே.

போற்றுமுயர் வேதியர்கள் புத்தர் சமணரொடு
சாற்றுங் கிறிஸ்தவர்கள் சாருமிஸ்லாம் பல்லவர்கள்
ஏற்றுத் தழுவியதும் இன்பங் கெழுமியதும்
மாற்றுவிடாப் பொன்போன்ற வண்டமிழர் சால்புகளே.

நம்மருமைச் சங்கரரும் நவில்ராம அனுஷர் மற்றும்
செம்மைமன மாதவராம் தென்னாட் டறிஞரும்மே
வானமிர்த இலக்கியங்கள் வரைந்து வடமொழியில்
தேனமர வூட்டியதும் செந்தமிழர் சால்புகளே.

வீரமாமுனிவரொடு போப் பையர் கால்ட்வெல்ட் ஆம்
தீரமுறு மேநாட்டுத் திருமறையோர் தீந்தமிழின்
காவலராய் வாழ்ந்திங்கு காப்பியங்கள் ஆய்வுகளை
ஆவலுடன் தந்துதந்தே யள்ளிப் பருகியதும்
சீவனெனும் எந்தமிழர் செந்தண்மைச் சால்புகளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாரதப்பண் பாட்டின பரப்பில்நால் மூன்றுபங்கும்
சேரத திகழ்வதும் திராவிடரின் சால்பென்றே"
கூரியநல் லாய்வாற் குறிப்பிட்டார் சட்டர் ஜீ
சீரியர்தாம் என்றால் தீந்தமிழர் சால்பினுக்கு
நேரியதும் ஒன்று நிலத்தில் உளதாமோ.

சங்கம் தமிழாய்ந்து தான்வளர்த்த காலத்தும்
மங்கா தகைமருவி வந்துநின்ற காலத்தும்
பொங்கி வரு பல்லவர்கள் களப்பிரர்கள் புடைசூழ்ந்து
தங்கிவரு காலத்தும் தலைநிமிர்ந்த சால்புகளை.

குன்றாய் வளர்ந்து குருதியுடன் தான் கலந்து
ஒன்றாய் நெடுமால்போல் ஓங்கி உலகளந்து
மூத்த தமிழரது "முதுசொம்" என நின்ற
மாத்தருமச் சால்புகளை மணிமணியாய்க் கோத்தெடுத்துச்

"சென்றவிடத்தால் செலவிடா தீதொரி இ
நன்றின்பால் யுய்ப்பதறி" வென்னும் நல்வாக்கை
ஒன்றமதித்தே உபய பதம் கொப்புளிக்கும்
காயம் பொறுத்துக் கடுகதியில் ஆழ்கடலிற்
பாயும் அருங்கலத்தில் பறக்கும் விமானத்தில்
தாயின் தனியன்புத் தாகமின் வேகமொடு
மாயிரு ஞாலமெங்கும் வகுத்தாய் எடுத்துரைத்தே
ஆயிரங் காலத்தும் அழியாநல் வித்திட்ட
"அன்புருவம் ஆன்ற கலையறிவு ஆராய்ச்சிப்
பண்புருவம்" என்றுபகர் தூதின் இலட்சணங்கள்
நன்கமைந்த எங்கள்தனி நாயகத்துக் கீடுண்டோ.
அண்ணாமலை கந்த ஆன்ற கலைஞானம்
விண்ணா ரமுத விருந்தாகத் துய்த்தது கொல்
கண்ணார் குருதேவர் மீனாட்சி சுந்தரரின்
பண்ணார் உயர்நட்பும் பரிசாய்க் கிடைத்ததுகொல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாமமிட்டுத் தமிழரென நாம்பிறந்தால் ஞாலமெல்லாம்
தேமதுரத் தமிழோசை செய்தாக வேண்டு" மெனும்
மாமதுவை யூட்டிவைத்த பாரதியின் மந்திரங் கொல்
எடுத்தாள நாடொன்றும் எமக்கிலையே யென்றாலும்
எழுத்தாளர் வரிசையிலே இயன்றதையாம் செய்வமென்றே
அழுத்து மனப்பான்மை பழுத்துச் சொரிந்தது கொல்

உண்ணேர் துடிப்போடே யூன்றி யெழுதியதும்
எண்ணி யெண்ணிக் கொட்டியதும் எங்கள் இருந்தமிழர்
பண்பாடு - தமிழ்த்தூது பாங்கார் அகராதி
மன்னியவோர் கைந்நூல் மகத்தான சஞ்சிகைகள்
கன்னித் தமிழணங்கின் காதற்பொற் றாலியென
மின்ன எமக்களித்த மெய்ஞ்ஞானப் பற்றது கொல்
அகில உலகத்தமிழ் ஆய்வுக்கழக மெனும்
மகவினையே யீன்றெடுத்த மாதவத்தின் பேறதுகொல்
ஏதுவமை கற்பனையென் றிவரை ஆராய்தல்
ஓது நுனிப் புல்மேயும் என்போன் றார்க் கொண்ணாதே
ஆதலினால் அவர்க்குவமை அவரெனவே சால்புடைத்தாம்

அன்னமொடு கிள்ளைத்தமிழ் அறுகாற் சிறுபறவை
மின்னுமகன் மேகமொடு மென்பூவை மான்முதலாய்த்
துன்னுபல தூதின் துறைகண்ட நம்நாடு
தொல்லாண்மைப் பாண்டவர்க்காய்த் தூதுரைத்தான் கண்ணபிரான்
நல்லடியார் சுந்தரர்க்காய் நம்பெருமான் தூது சென்றார்
வல்லசுதன் யேசுவுக்காய் வான்தூதுசென்றார் நாயகத்தார்
"எல்லாம் அவன் செயலே" இவர் நாமம் வாழியரோ
எம்சால் பனைத்தும் இனிதுணர்த்தத் தூது சென்ற
மும்மலங்கள் நீத்த முனிவர்தனி நாயகத்தார்
செம்மைத் தமிழ்கிடக்கும் திருவமர்ந்த யாழ்நகரில்
தம்மிறுதிக் காலத்தைத் தவசெபத்தி லேநிறுத்தி
அகவை அறுபானேழ் ஆன ரெளத்திரியில்
மகவை யிழந்த தமிழ் மாதா மனமுருக




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தின் தயிர்போல மனமுடைந்து மக்களழ
முக்தர்களும் பக்தர்களும் மோனபர முனிவர்களும்
சித்தர்களும் வாழ்த்தெடுப்பந் தேவசுதன் திருவடியில்
நித்தியபே ரின்பமதில் நீந்துதற்குச் சென்றுவிட்ட
தத்துவனைச் சால்பினுக்கோர் 'கட்டளைக்கல்' போன்றவனை
வித்தகனை மெய்ஞ்ஞான விரிசுடரை மேதினியிற்
கலைவடிவிற் காட்சிதந்த கற்பகத்தை மாமதுரைச்
சிலைவடிவிற் கண்டேனும் சிறிதுமனந் தேறியன்னார்
மலரடியில் முடிவைத்தேன் மன்நாமம் வாழியரோ.

மட்டுவில் சனசமூக நலையம் நடாத்திய தனிநாய அடிகள் நினைவுப் போட்டியில் சிறப்புப் பரிசு பெற்ற கவிதை (1986)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தாவீது அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்திரு தாவீதடிகள்

நேரிசை - ஆசிரியப்பா

நீலத் திரைக்கடல் நித்திலங் கொழிக்கும்
கோலத் திருநகர், ஈழச் சிரமதிற்
தோன்றும் பருத்தித் துறைமா தவள்பிறை
என்ற நன்னுதல் இலங்கிடு திலகம்
போன்ற தும்பளை புனிதநல் லூர்த்து
அன்னை தன் பொற்பதி ஆற்றிய தவத்தல்
முன்னவ தரித்து மொழிபல கற்று
முற்றத் துறந்த முதிர்தவக் குருமணி
தற்பரன் இயேசுவின் தாசனாய் வாழ்ந்து
அற்புதப் பணிகள் ஆயிரஞ் சுமந்தோன்
திரித்துவ அருளொடு திகழ்ந்தபே ராசான்
தரித்திரம் அமைவு தகவு நிறை பொறை
தாழ்மை எளிமை தங்கும் இருப்பிடம்
ஆழ்கலை யறிவின் அசையாப் பிறப்பிடம்;
ஞானப் பொருளால் நல்விருந் திட்ட
மோனத் தவசெப முதிர்ச்சி கனிவிடம்
அல்லும் பகலும் அயரா துழைப்பிடம்
சொல்லுஞ் செயலுந் தூய்மையின் புகலிடம்
'பைபிளும்' குறளும் வகுத்த வரம்பின்
வழியினைக் கடவா வாழ்க்கையின் மதிப்பிடம்
பொழிதமிழ் சங்கப் புலவர்கள் வடித்த
மொழிநூற் பக்கமும் பாவும் வரிகளும்
தனித்தனி குடித்த தண்டமிழ்ச் சாகரம்
நுனிந்தபுன் மேயா நுண்மதி மாண்பிடம்
பன்மொழிக் கடலிற் படிந்தே யுழன்று
நன்மணி யெடுத்து நவையறக் கோத்துத்
தனிமொழி தமிழே யுலகின் தாய்மொழி
என்றுவார் முரசம் எண்டிசை கொட்டிய
ஞானப்பிரகாச நற்றவ முனிவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிய வழியைப் பின்தொடர்ந் தன்னான்
ஆற்றிய சொற்பிறப் பொப்பியல் தன்னை
நீற்றிய தங்கமாய் நிலவுல களித்தோன்
புரைதபு சந்தனப் பொதியைமீ தமர்ந்து
குரைகடல் குடித்த குறுமுனி போலே
பூங்கலைத் தென்றல் புகழ்மணம் வீசித்
தேங்குபத் திரிசியார் திருநிறை மாடத்(து)
ஆங்கினி தமர்ந்து ஆய்வுக் கடல்மிசை
ஓங்கி உலாவிய ஒருதனி வங்கம்
ஒரெழுத் தொருமொழி உருவம் ஒலிவரு
தூரெலாம் நுழைந்து துழாவி யனைந்து
சத்திரசிகிச்சை தனித்தனி செய்து
இத்தரை லீலா-நளா வென இரண்டு
பாகக ராதி படைத்தே அறிஞர்
தாகந் தீர்த்த தனிப்பெரு தமிழ்மகான்
பாவீ தடங்காப் பண்பினன்
தாவீ தடிகள் தாமென் பவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISBN 955434752-9

9 789554 347526

Harikanan, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org